## நவம்பர்– 02 – வெள்ளி

### இறந்த அனைத்து ஆன்மாக்கள்

### நானும் இறுதி நாளில் அவர்களை உயிர்த்தெழச் செய்வேன்" யோவா.6:40

## முதல் வாசகம் : ஞான ஆகமம் 3 : 1 – 9

நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன. கடுந்தொல்லை எதுவும் அவர்களைத் தீண்டாது.அறிவிலிகளின் கண்களில் இறந்தவர்களைப்போல் அவர்கள் தோன்றினார்கள். நீதிமான்களின் பிரிவு பெருந்துன்பமாகக் கருதப்பட்டது.அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து சென்றது பேரழிவாகக் கருதப்பட்டது. அவர்களோ அமைதியாக இளைப்பாறுகிறார்கள்.மனிதர் பார்வையில் அவர்கள் தண்டிக்கப்பட்டாலும், இறவாமையில் அவர்கள் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.சிறிதளவு அவர்கள் தண்டித்துத் திருத்தப்பட்டபின், பேரளவு கைம்மாறு பெறுவார்கள். கடவுள் அவர்களைச் சோதித்தறிந்தபின், அவர்களைத் தமக்குத் தகுதியுள்ளவர்கள் என்றுகண்டார். பொன்னை உலையிலிட்டுப் புடமிடுவதுபோல் அவர் அவர்களைப் புடமிட்டார் எரிபலிபோல் அவர்களை ஏற்றுக்கொண்டார்.கடவுள் அவர்களைச் சந்திக்கவரும்போது அவர்கள் ஒளிவீசுவார்கள் அரிதாள் நடுவே தீப்பொறிபோலப் பரந்து சுடர்விடுவார்கள். நாடுகளுக்குத் தீர்ப்பு வழங்குவார்கள் மக்கள்மீது ஆட்சி செலுத்துவார்கள். ஆண்டவரோ அவர்கள்மீது என்றென்றும் அரசாள்வார்.அவரை நம்புவோர் உண்மையை அறிந்துகொள்வர் அன்பில் நம்பிக்கை கொள்வோர் அவரோடு நிலைத்திருப்பர். அருளும் இரக்கமும் அவர் தேர்ந்து கொண்டோர் மீது இருக்கும்.

**பதில்பாடல்:** ஆண்டவர் என் ஆயர் எனக்கேதும் குறையில்லை.

## இரண்டாம் வாசகம்: உரோமையர் 6 : 3 - 9

சகோதர சகோதரிகளே! திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாமனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியாதா? இறந்த கிறிஸ்துவை மாட்சிமிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம். அவர் இறந்ததுபோலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம்.நாம் இனிமேல் பாவத்துக்கு அடிமைகளாய் இராதபடி, நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. இவ்வாறு பாவத்துக்கு உட்பட்டிருந்த நம் இயல்பு அழிந்து போகும். இது நமக்குத் தெரியும்.ஏனெனில் இறந்தோர் பாவத்தினின்று விடுதலை பெற்றுவிட்டனர் அன்றோ?கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை.இறந்து உயிருடன் எழுப்பபட்ட கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார் இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்ல என நாம் அறிந்திருக்கிறோம்.

## நற்செய்தி : யோவான் 6 : 37 - 40

அந்நாட்களில் இயேசு மக்களை நோக்கிக் கூறியதாவது : "தந்தை என்னிடம் ஒப்படைக்கும் அனைவரும் வந்துசேருவர். என்னிடம் வருபவரை நான் புறம்பே தள்ளிவிடமாட்டேன். ஏனெனில் என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல, என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத் திலிருந்து இறங்கிவந்தேன். அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழியவிடாமல் இறுதிநாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்யவேண்டும். இதுவே என்னை அனுப்பியவரின் திருவுளம். மகனைக்கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறவேண்டும் என்பதே என் தந்தையின் திருவுளம். நானும் இறுதிநாளில் அவர்களை உயிர்த்தெழச் செய்வேன்" என்றுகூறினார்.

**தியானம்:** இன்று தாய் திருச்சபை இறந்த ஆத்துமாக்களின் திருவிழாவை கொண்டாடி மகிழ்கின்றது. கத்தோலிக்க கிறிஸ்தவ விசுவாசத்தின் படி இறப்பிற்கு பின்னால் விசுவாசிகளின் வாழ்வு மாறுபடுகின்றதே தவிர அவர்கள் வாழ்வு இறப்போடு முடிந்துபோவதில்லை. தூய பவுலடியார் இந்த மறைவுண்மையை விளக்கிச் சொல்லுகின்றார், "இதோ, ஒரு மறைபொருளை உங்களுக்குச் சொல்லுகிறேன். நாம் யாவரும் சாகமமாட்டோம். ஆனால், அனைவரும் மாற்றுருப் பெறுவோம். ஒரு நொடிப்பொழுதில், கண் இமைக்கும் நேரத்தில் இறுதி எக்காளம் முழங்கும்போது இது நிகழும்'' (1கொரி.15:51-52). ஆகவே நம்முடைய வாழ்க்கையின் இலக்கு மறுஉலகுக்கு நம்மை தயார்படுத்திக் கொள்வதாக அமைய வேண்டும். நமக்குக் கடவுள் கொடுத்துள்ள அழியாத ஆன்மாவை உலகத்தின் காரியங்களால் கறைபடுத்திக் கொள்ளாமல் பாதுகாத்து, அப்பழுக்கற்ற முறையிலே வாழ்ந்து, இறைவனுக்கு ஏற்ற முறையில் அமைத்துக் கொள்வதே நம்முடைய வாழ்வின் இலக்காக இருக்க வேண்டும். மனிதனுள் இருக்கும் அழியாத ஆன்மா கடவுளால் ஒவ்வொரு மனிதருக்கும் கொடுக்கப்பட்டது இந்த ஆன்மாவை இவ்வுலக வாழ்வு முடிவில் கடவுளிடம் திரும்பக் கொடுக்க வேண்டும். "தங்களுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்ட ஆன்மாக்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டியபொழுது அவர்கள் எந்த மண்ணிலிருந்து எடுக்கப்பட்டிருந்தார்களோ அந்த மண்ணுக்கே திரும்பிக் போகிறார்கள்.'' (சாஞா.15:8). ஆகவே கடவுளுக்கு முன்பாக நாம் வாழ்ந்த வாழ்க்கைக்காக இறைவனிடத்தில் கணக்குக் கொடுக்க வேண்டும். "இவ்வுலக கூடாரத்தில் குடியிருக்கும் நாம் இக்கூடாரத்தை விட்டு விலக வேண்டும் என்பதல்ல மாறாக விண்ணக வீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே நம் விருப்பம்'' (2கொரி.5:4). எனவே விண்ணகத்தை உரிமையாக்கிக் கொள்ள இந்த ஆத்துமாவை பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை இயேசு நமக்குக் கற்றுக்கொடுத்தார், தன்னுடைய அப்பழுக்கற்ற தூய்மையான வாழ்வால் எண்பித்துக் காண்பித்தார். சிலுவையிலே தனது இரத்தத்தையும் உடலையும் கொடுத்து நமக்கு இந்த மீட்பை பெற்றுத்தந்தார். "உண்மைக்குக் (இயேசுவுக்கு) கீழ்படிந்து உங்கள் ஆன்மா தூய்மை அடைந்துள்ளதால் நீங்கள் வெளிவேடமற்ற முறையில் சகோதர அன்பு காட்ட முடியும். எனவே நீங்கள், தூய உள்ளத்தோடு ஒருவொருக்கொருவர் ஆழ்ந்த அன்பு காட்டுங்கள்'' (1பேதுரு.1:22). "ஏனெனில் அன்பு திரளான பாவங்களை போக்கும்'' (1பேதுரு.4:7). சகோதர அன்போடு ஒருவரை ஒருவர் நேசித்து, அவர்களுக்காக நம்மையே பலியாக்கும் போது நாமும் விண்ணகத்திற்கு உரிமையாளர்களாக மாறுகின்றோம். உண்மையோடும் நீதியோடும் அன்போடும் பிறரை மன்னித்து எல்லாரோடும் அமைதியோடு உத்தமராய் பரிசுத்தமான வாழ்வு வாழ்ந்து விண்ணகத்தை உரிமையாக்கிக் கொள்ள நாளும் முயற்சிப்போம்.